# இராமேஸ்வரம் நகர் மன்றகூட்டம்

## 2018 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 30ம் தேதிகாலை 11 : 00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்றக் கூட்ட நடவடிக்கை

## முன்னிலை: அ. வீரமுத்துகுமார் B.Tech., தனிஅலுவலர் மற்றும் ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி

| பொருள் எண் | பொருள்விபரம் | தீர்மானவிபரம் |
|---|---|---|
| 1 | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக்குழாய்கள் மற்றும் குடிநீர் நீரேற்றக்குழாய்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்பினை சரிசெய்யும் பொருட்டு ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு தனிஅலுவலர்/ஆணையாளர் இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விபரப்படியாக ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்<br><br>**வ.எண்** **ஒப்பந்ததாரர் பெயர்**<br><br>1. திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.17% குறைவு<br>2. திரு. P.N. சுந்தரம் ஒப்பந்ததாரர் — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.53%கூடுதல் | **தீர்மானம் எண். 145 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | இராமேஸ்வரம்<br>**<u>அலுவலகக்குறிப்பு</u>**<br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த 0.17% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M.K. திருமுருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br>2. தனிஅலுவலர்/ ஆணையாளர், இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் பணி உத்திரவு வழஙகியதையும் ஏற்கலாம். | |
| **2** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் :1 முதல் 21 க்குட்பட்ட பகுதிகளில் உள்ள தெருமின் விளக்குகளை பராமரித்திட தேவையான மின்உதிரி பொருட்கள் வாஙகிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு நகர் மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br>மேற்காணும் பணியானது பொதுமக்கள், சுற்றுலா பயணிகள் மற்றும் யாத்ரீகர்களின் பாதுகாப்பு தொடர்பான பணியாக இருப்பதால் அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 146 அனுமதிக்கப்பட்டது.** |
| **3** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண் 10 க்குட்பட்ட சேரான்கோட்டை கரையூர் மற்றும் வார்டு எண் 16க்குட்பட்ட கெந்தமாதன பர்வதம் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு செய்யும் பணிக்கு ரூ.6.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் தனது 31.08.18—ல் தேதிய தீர்மானம் எண்:188 ன் படி நிர்வாக அனுமதி அளித்துள்ளதைத் தொடர்ந்து மேற்காணும் பணிக்கு முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்படியாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு | **தீர்மானம் எண். 147 அனுமதிக்கப்பட்டது** |

| | | |
|---|---|---|
| | **வ.எண் ஒப்பந்ததாரர் பெயர்**<br><br>1. திரு. M.K. திருமுருகன் ஒப்பந்ததாரர் இராமநாதபுரம் — மதிப்பீட்டைக் காட்டிலும் 0.05 % குறைவு<br>2. திரு. P.N. சுந்தரம் ஒப்பந்ததாரர் இராமேஸ்வரம் — மதிப்பீட்டைக் காட்டிலும் 2.00 % கூடுதல்<br><br>**<u>அலுவலகக்குறிப்பு:</u>**<br><br>1. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைந்த 0.05% ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M.K. திருமுருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br><br>2. மேற்காணும் பணியானது குடிநீர்த்திட்ட பணியாக இருப்பதாலும் பொதுமக்களின் குடிநீர் விநியோக நலன் கருதி அனுமதிக்கலாம். | |
| **4** | இராமேஸ்வரம் நகராட்சி தொடர்பான இராமேஸ்வரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற வழக்குகளுக்கு மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்குகளின் வழக்கு கட்டணம் ரூ.22000/– வழக்கறிஞர் திரு.ஆர்.விஜயக்குமார் அவர்களுக்கு வழஙக மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 148 அனுமதிக்கப்பட்டது.** |
| **5** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலக வளாகத்தினுள் உள்ள கழிப்பறையை இடித்து அப்புறப்படுத்தி பதிவறையாக மாற்றம் செய்திடவும் மற்றும் அலுவலக பின்புறம் கழிப்பறை கட்டும் | **தீர்மானம் எண். 149 அனுமதிக்கப்பட்டது.** |

<table>
<tr>
<td></td>
<td>
பணிக்கு 16–05–2018 ஆம் தேதியில் முதன்முதலாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்காணும் விவரப்பபடியாக வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு
<table>
<tr><td>வ.எண்</td><td>ஒப்பந்ததாரர் பெயர்</td><td></td></tr>
<tr><td>1.</td><td>திரு. M.K. திருமுருகன்<br>ஒப்பந்ததாரர்<br>இராமநாதபுரம்</td><td>மதிப்பீட்டைக் காட்டிலும் 0.09 % குறைவு</td></tr>
<tr><td>2.</td><td>திரு. P.N. சுந்தரம்<br>ஒப்பந்ததாரர்<br>இராமேஸ்வரம்</td><td>மதிப்பீட்டைக்காட்டிலும் 0.49 %கூடுதல்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u><br><br>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைந்த % ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு. M.K. திருமுருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.<br><br>
2. அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியினை எதிர்நோக்கி ஆணையாளர்/தனிஅலுவலர், இராமேஸ்வரம் நகராட்சி அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழஙகியதையும் ஏற்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>6</td>
<td>
அரசாணை (நிலை) எண்.73 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந 4) துறை நாள்.19.07.2018–ன்படி, உள்ளாட்சி அமைப்புகளிலுள்ள சொத்துவரி விதிப்புகளை, 01.04.2018 முதல் பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிளை மேற்கொள்ள ஆணையிடப்பட்டுள்ளது.
<table>
<tr><th>வ.எண்</th><th>விபரம்</th><th>சொத்துவரி சீராய்வு</th></tr>
</table>
</td>
<td>தீர்மானம் எண். 150<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 1 | *Residential Buildings*<br>*குடியிருப்பு கட்டிடங்களுக்கு* | *Not More than 50 %*<br>50 % மிகாமல் |
| 2 | *Rented Residential Buildings*<br>*வாடகை குடியிருப்பு கட்டிடங்களுக்கு* | *Not More than 100 %*<br>100 % மிகாமல் |
| 3 | *Non Residential Buildings*<br>*குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு* | *Not More than 100 %*<br>100 % மிகாமல் |

அதன் பின்னர் வரப்பெற்றுள்ள் அரசு ஆணை (நிலை) எண்.76 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மாந 4) துறை நாள்.26.07.2018–ன்படி, மேற்கண்ட உயர்வு சதவீதத்தில் திருத்தம் செய்து, பின்வரும் வீதத்தில் சொத்துவரி உயர்வு செய்து சொத்துவரி சீராய்வு பணிகளை மேற்கொள்ள ஆணையிடப்படுள்ளது.

| வ.எண் | விபரம் | சொத்துவரி சீராய்வு |
|---|---|---|
| 1 | *Residential Buildings*<br>*குடியிருப்பு கட்டிடங்களுக்கு* | *Not More than 50 %*<br>50 % மிகாமல் |
| 2 | *Non Residential Buildings*<br>*குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு* | *Not More than 100 %*<br>100 % மிகாமல் |

| | | |
|---|---|---|
| | மேற்கண்ட அரசாணைகள் தனி அலுவலர் அவர்களின் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**<u>கோப்பு எண். 813/2018/அ2</u>**<br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br>1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.<br>2. மேற்கண்ட அரசாணையின்படி சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அனைத்து பணிகளையும் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.<br>3. சொத்துவரி பொதுதிருத்தம் தொடர்பான அறிவிப்பினை நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கும், அதற்கான செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம்.<br>4. சொத்துவரி தொடர்பான பொது அறிவிக்கையினை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதற்கும், அதற்கான செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம்.<br>5. சொத்துவரி தொடர்பான படிவங்களை இளம் நீல நிறம்,இளம் சிவப்பு நிறம் மற்றும் வெள்ளை நிறங்களில் அச்சடிப்பதற்கும், அதற்கான செலவினங்களுக்கும் அனுமதி அளிக்கலாம் | |
| **7** | இராமேஸ்வரம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 21 மண்டித்தெருவில் அமைந்துள்ள பிரஜா பிதா பிரம்மா குமாரிஸ் ஐஸ்வர்ய விஷ்வ வித்யாலயா கட்டிடம் வரிவிதிப்பு எண் 23151 காலிமனை வரிவிதிப்பு எண் 800824 தீயான மண்டபமாக பயன்பாட்டில் உள்ளது என்பதால் வரிவிலக்கு அளிக்க கோரி மனு வரப்பெற்றுள்ளது. மேற்படி கட்டிடத்தில் ஆன்மிக நிகழ்வுகள் தவிர வேறு எந்த | **தீர்மானம் எண். 151 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| | நிகழ்வுகளும் நடைபெற வில்லை என மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(அ) ன் பொதுமக்கள் மற்ற எவ்வித நோக்கமின்றி பொதுவழிபாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொதுகட்டிடங்களுக்கு வரி விலக்கு அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, மேற்படி கட்டிடத்தினை வருவாய் பிரிவு பணியாளர்கள் நேரடி ஆய்வு செய்ததில் கட்டிடம் முழுமையாக ஆன்மிக பணிக்காக மட்டுமே செயல்பட்டு வருகிறது. இதில் எவ்வித கட்டணமோ, இலாபம் ஈட்டும் முறையில் எவ்வித வருமானமோ ஈட்டப்படவில்லை. எனவே, மேற்காணும் பிரஜா பிதா பிரம்மா குமாரிஸ் ஐஸ்வர்ய விஷ்வ வித்யாலயா கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும், வரிவிதிப்பு எண் 23151 2013–2014 ம் ஆண்டு முதல் 2018–2019 வரை நிலுவைத்தொகை ரூ.80562/– மற்றும் காலிமனை வரிவிதிப்பு எண் 800824, 2009–2010 முதல் 2018–2019 வரை நிலுவை தொகை ரூ.24035 ஆகமொத்தம் ரூ104597/– ஐ சொத்துவரி கேட்பில் இருந்து நீக்கம் செய்ய மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>மேற்படி கட்டிடமானது ஆன்மீக பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படும் கட்டிடம் என்பதாலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 83(அ) ன் படி பொதுமக்கள் மற்ற எவ்வித நோக்கமின்றி பொதுவழிபாட்டிற்கு பயன்படுத்தப்படும் பொதுகட்டிடங்களுக்கு வரி விலக்கு அளிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன் படியும் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கவும், மேற்குறிப்பிட்ட தொகை ரூ104597/– ஐ கேட்பில் இருந்தும் நீக்கம் செய்ய மன்றம் அனுமதிக்கலாம். | |

| | | |
|---|---|---|
| **8** | இராமேஸ்வரம் நகராட்சி அலுவலக ஈப்பு எண் TN65J6409 வாகனத்திற்கு காப்பீடு செய்ய செலவினம் ரூ.26058/– வழங்க ஆணையரின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 152**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **9** | இராமேஸ்வரம் நகராட்சி வார்டு எண்:15க்குட்பட்ட சல்லிமலை தெற்கு பகுதியில் சிமிண்ட் தளம் அமைக்கும் பணிக்கு ரூ.10.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>**<u>அலுவலக குறிப்பு:</u>**<br><br>அனுமதிக்கலாம். | **தீர்மானம் எண். 153**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**ஆணையாளர்/தனிஅலுவலர்,**
இராமேஸ்வரம் நகராட்சி.